பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை

01 01 2025 **WEDNESDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை அடுத்த நிதியாண்டு இறுதிவரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
2. சரக்கு மற்றும் சேவை வரிவருவாய் கடந்த மாதம் 7 புள்ளி மூன்று சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
3. தமிழகத்தில் அனைத்துத்தரப்பினருக்கும் பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.
4. திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. உலக **Blitz** செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் வைஷாலி வெண்கலப்பதக்கம் வென்றார்.

இனி விரிவான செய்திகள் ----

**<<<<<<>>>>>**

பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை அடுத்த நிதியாண்டு இறுதிவரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், நடப்பாண்டின் முதலாவது அமைச்சரவைக்கூட்டம், விவசாயிகள் நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

விவசாயிகள் நலன் தொடர்பான திட்டங்கள் இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்திய பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை நீட்டிப்பது என்று இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

69 ஆயிரத்து 515 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக நிதியம் ஒன்றை ஏற்படுத்துவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் கூறினார்.

824 கோடியே 77 லட்சம் ரூபாய் செலவில் இந்த நிதியம் ஏற்படுத்தப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**DAP** உர மானியம் வழங்குவதற்காக தற்போது செயல்பாட்டில் உள்ள சிறப்பு தொகுப்புத் திட்டத்தை மறு உத்தரவு வரும் வரை நீட்டிப்பதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் கூறினார்.

இதற்காக நடப்பாண்டில் 3 ஆயிரத்து 850 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பாதுகாப்புத்துறை, நடப்பாண்டை சீர்திருத்த நடவடிக்கைகளுக்கான ஆண்டாக அறிவித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற உயர்நிலைக்குழு கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பாதுகாப்புத்துறையின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து இக்கூட்டத்தில் திரு ராஜ்நாத் சிங் ஆய்வு மேற்கொண்டு பேசினார்.

பாதுகாப்புப்படைகளை நவீன மயமாக்குவதற்கான பணிகளுக்கு இந்த நடவடிக்கை உதவிடும் என்றும் அவர் கூறினார்.

எந்தவொரு சவால்களையும் எதிர்கொள்வதற்கு ஏதுவாக, நமது படைகளை தயார் செய்வதற்கும் இந்த நடவடிக்கை உதவிகரமாக இருக்கும் என்றும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரிவருவாய் கடந்த மாதம் 7 புள்ளி மூன்று சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதன்படி, கடந்த மாதம் இந்த வரி வருவாய் ஒரு லட்சத்து 76 ஆயிரத்து 857 கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளதாக நிதியமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த ஆண்டு இதே மாதம், சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 882 கோடி ரூபாயாக இருந்தது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தில் அரசு அதிகாரிகள், காவல்துறையினர், பெண்கள், முதியவர்கள் என யாருக்கும் பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவி வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.
இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை சம்பவங்களுக்கு ஆளும் திமுக-வை சேர்ந்தவர்களே காரணமாக உள்ளதாக குறை கூறியுள்ளார்.
மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரம் கண்டிக்கத்தக்கது என்று மதிமுக பொதுச்செயலாளர் திரு வைகோ கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்கு அதிகபட்ச தண்டனை கிடைப்பதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அனைத்துத்தரப்பினரும் பயன்பெறும் வகையில் தமிழக அரச திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

ஆட்சியில் பங்கு என்ற கோரிக்கை மதிமுக-வை பொறுத்தவரை ஏற்புடையது அல்ல என்றும் திரு வைகோ தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் காலியாக உள்ள அரசு பணியிடங்களை பூர்த்தி செய்வதில் மாநில அரசு அலட்சியம் காட்டுவதாக பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

60 லட்சத்திற்கும் கூடுதலான இளைஞர்கள் அரசுப்பணிக்காக காத்திருக்கும் நிலையில், அதிக எண்ணிக்கையில் காலி பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருப்பது சமூக அநீதியாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பணியிடங்களை விரைவில் பூர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

மகளிரின் உயர் தொழில்நுட்பக்கல்வி வாய்ப்பை உறுதி செய்யும் வகையில், மத்திய அரசு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இந்த திட்டம் சேலம் மாவட்டத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் - 63 செகண்ட்ஸ்)*

மத்திய அரசின் இந்த திட்டம் தங்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருப்பதாக மாணவிகள் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - மாணவிகள் - 46 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

புத்தாண்டு விடுமுறை தினத்தையொட்டி, மாநிலம் முழுவதும் சுற்றுலா தலங்களில் சுற்றுலாப்பயணிகள் குவிந்தனர்.

ஒகேனக்கல்லை ஏராளமான சுற்றுலாப்பயணிகள் பார்வையிட்டதாகவும், இதனையொட்டி, விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - தண்டபானி - 46 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சிவகங்கை மாவட்டத்தில் ஷெல்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கு போட்டித்தேர்வுக்கான இலவச பயிற்சி வழங்கப்பட உள்ளதாக ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

----------------

பெரம்பலூர் மாவட்டத்தில் தொட்டில் குழந்தை திட்டத்தின்கீழ், தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிய தகுதி வாய்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் கூறியுள்ளார்.

-----------------

தென்காசி மாவட்டம் குற்றால அருவியில் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

உலக **Blitz** செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் வைஷாலி வெண்கலப்பதக்கம் வென்றார். நியூயார்க்கில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பந்துவீச்சு பிரிவில் இந்தியாவின் தீப்தி சர்மா ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

------------------

ஹரிஷ் குமார் ரெட்டி தலைமையிலான இந்திய கோல்ஃப் சங்கத்திற்கு, இந்திய ஒலிம்பிக் சங்கம் அங்கீகாரம் அளித்துள்ளது.

**<<<<<<END>>>>>**